31.07.2025 MCOP No.3/2017

சாட்சி : PW 2 சாத்தையா

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை:**

1. விபத்தில் காயம்பட்ட நபரும் நானும் ஒரே ஊர் என்றால் பக்கத்து பக்கத்து வீடு ஆகும். நான் அவரது பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல, நான் விபத்தை நேரடியாக பார்த்தேன். இந்த விபத்தில் காயம்பட்ட நபரின் கணவர் வடக்கிலிந்து தெற்கே வந்தாரா என்றால் சரிதான். விபத்தில் காயம்பட்ட நபரின் பெயர் என்னவென்றால் ஜெயராமன். ஜெயராமன் இருசக்கர வாகனம் ஓட்டிச் செல்லும் போது தலைக்கவசம் அணிந்தாரா இல்லையா என்பது எனக்குத் தெரியாது என்றால் சரிதான்.

2. டாடா ஏசி வாகனம் இடித்ததாக சொல்லியுள்ளது எந்த திசையில் இருந்து எந்த திசையில் இருந்து வந்தது என்றால் கிழக்கிலிருந்து மேற்காக வந்தது. விபத்து நடைபெற்ற இடம் நான்கு திசையிலும் ரோடு உள்ளது என்றால் சரிதான். டாடா ஏசி வாகனம் கிழக்கிலிருந்து மேற்காக வந்த வாகனம் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். விபத்தில் அடிபட்ட வீட்டுக்காரர் ரோட்டை கடக்கும்போது விபத்து நடந்தது என்றால் சரிதான். விபத்து நடக்கும்போது நான் எங்கு நின்று கொண்டிருந்தேன் என்றால் நான் சுமார் 10 அடி தூரத்தில் வந்து கொண்டிருந்தேன். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றும், விபத்தில் காயம்பட்டவர் என் ஊர்க்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.